

சாமர்த்தியமாக இருங்கள்

# போலியான செய்திகளைக் கண்டறிய உங்கள் பிள்ளைக்கு உதவுங்கள்

MediaLiteracyCouncilSG

www.betterinternet.sg



## இணையத்தில் சரியானதைக் கடைப்பிடிக்கவும்

- **செய்தி தோன்றுவதற்கான அடிப்படை (மூலம்)** பற்றிக் கேள்வி கேளுங்கள்
- **தகவலை** உறுதிப்படுத்துங்கள்
- **நிபுணர்களுடன்** சரிபாருங்கள்

**CHECK Please!**

Be Safe. Be Smart. Be Kind.



National Library Board Singapore | Media Literacy Council | Infocomm Media Development Authority | SG:D GET READY!

நாமும் நம்பி மற்றவர்களோடு
பகிர்வதற்கு முன்பு,

# தயவுசெய்து சரிபாருங்கள்!

**உங்கள் பிள்ளை இணையத்தில் சாமர்த்தியமாக செயல்பட நாங்கள் வழங்கும் 5 ஆலோசனைகள் அடங்கிய சரிபார்க்கும் பட்டியல்.**

## 01 ஒரு மூலத்தின் நம்பகத்தன்மையை சோதிக்க அவர்களுக்குக கற்றுக் கொடுங்கள்

வழங்கப்படும் தகவல் நம்பகமானதா என்பதைச் சோதிக்கப் பயனுள்ள ஆலோசனைகளைப் பகிருங்கள். எடுத்துக்காட்டுக்கு, இலக்கண மற்றும் எழுத்துப்பிழைகளைக் கவனிக்கவும். இணைய முகவரியைச் (URL) சோதனை செய்து அந்தத் தளமானது ஏமாற்றுத் தளமற்றதாக இருப்பதை உறுதிசெய்யவும். “எங்களைப் பற்றி” மற்றும் “எங்களைத் தொடர்புகொள்ள” போன்ற பக்கங்களைச் சோதனையிடவும்.

## 02 நம்பகத்தன்மைமிக்க மூலங்களைப் பயன்படுத்த அவர்களுக்கு நினைவூட்டுங்கள்

நண்பர்கள் அல்லது சமூக ஊடகங்கள் மூலமாக மட்டும் செய்திகளை பெறாமல், நம்பகத்தன்மையான செய்தித் தளங்கள் மற்றும் மூலங்களிலிருந்து செய்திகளை திரட்டும் முக்கியத்துவத்தை விளக்கமாக கூறுங்கள். கலந்தாலோசித்து நம்பகத்தன்மையான மூலங்கள் சிலவற்றை எடுத்துக்காட்டாக வைத்துக்கொள்ளுங்கள்.

## 03 சரிபார்க்கும் பழக்கத்தை கடைப்பிடிக்க ஊக்கமளியுங்கள்

அவர்களுக்கு கிடைத்த தகவலை மற்ற நம்பகமான மூலங்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்கும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள் என்று உறுதிப்படுத்துங்கள்.

## 04 எந்த நிபுணர்களை அணுகலாம் என்று அவர்களுக்குக் காட்டுங்கள்

சந்தேகம் ஏற்பட்டால், கிடைக்கப்பெற்ற செய்தியின் துல்லியத்தைச சரிபார்க்க, ஃப்க்சூவலி (www.gov.sg/factually), சுனோப்ஸ் (www.snopes.com) போன்ற தளங்களை ஆராயலாம். அல்லது ‘தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்’ மின்னஞ்சல் முகவரிக்கு (askST@sph.com.sg) எழுதலாம். நம்பகத்தன்மையான மூலங்களைப் பெற உதவி தேவைப்பட்டால் தேசிய நூலக வாரியத்தின் சான்றாதாரம் செய்திக்கூறுக்கு ref@nlb.gov.sg என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் மின்னஞ்சல் அனுப்பலாம்.

## 05 சரிபார்க்கப்படாத செய்திகளைப் பகிராமல் இருக்கும்படி அவர்களுக்கு ஊக்கமளியுங்கள்.

தலைப்புகளைத தாண்டி ஒரு செய்தி அறிக்கையை முழுமையாகப் படித்துவிட்டு ஒருமுடிவுக்கு வர வேண்டும் சில தலைப்புகள் வாசிகர்களை ஈர்க்க மிகைப்படுத்தப்பட்டிருக்கும்.

